भारत सरकार

India Post

# டாக் சம்வாத்

மார்ச் , 2026



भारतीय डाक
डाक सेवा-जन सेवा

India Post
Dak Sewa-Jan Sewa

வடிவமைப்பும், தொகுப்பும் : சந்தைப்படுத்துதல் (மார்க்கெட்டிங்) பிரிவு:

# பயணம்:

பக்கம் எண்


1 இந்திய அஞ்சல் துறையின் முதுகெலும்புடன் ஓர் உரையாடல்

2 GDS சம்மேளனம்: குண்டூர் மற்றும் உஜ்ஜயினி

3
- கலாச்சாரங்களுக்கிடையே பாலம் அமைத்தல், மனங்களுக்கு உத்வேகமூட்டு தல்
- அஞ்சல் வட்டங்களின் செயற்திறன் வெளிப்பாடுகளைப் பற்றிய மீளாய்வு

4
- இந்திய அஞ்சல்துறையின் எண்ணியல் எதிர்காலத்திற்கு உருக்கொடுத்தல்
- கர்நாடக மாநிலத்தில் பொது இயக்குநரின் வருகை முதன்மையான முன்னெடுப்புகளைக் குறிப்பதாக அமைந்தது

5 38 - ஆவது அகில இந்திய அஞ்சல் துறைக் கலாச்சாரச் சந்திப்பு

6
- இந்திய - பிரேஸில் அஞ்சல்துறைகளின் கூட்டுறவு ஒத்துழைப்பு
- இந்திய அஞ்சல் துறைக்கும், LA POSTE நிறுவமைப்புக்கும் இடையே குறிக்கோள் கடிதம் கையெழுத்தாகியுள்ளது

7
- இந்திய அஞ்சல் துறையும், எமிரேட்ஸ் அஞ்சல் துறையும் இ எம் எஸ் தர நிர்ணய ஒப்பந்தத்திற்கு ஏற்பளித்து ஏற்றுக்கொண்டன:
- இந்திய அஞ்சல் துறை - என் எஸ் இ கூட்டிணைவுச் செயல்பாடு


பக்கம் எண்


8
- துபாய் உலக அஞ்சல் தலைகள் கண்காட்சி - 2026 இல் இந்திய அஞ்சல் துறை: புதிய தலைமுறை அஞ்சலகங்கள்
- நுகர்வோர் அனுபவங்களை உருமாற்ற மடையச் செய்தல்:

9
- சந்தைப்படுத்துதல் பணிமனை: சந்தைப்படுத்துதல் செயற்பாட்டுத்திறன்களை வலிமைப்படுத்துதல்
- எண்ணியல் பயிற்சியளித்தல் உள்கட்டமைப்புகளை வலிமைப்படுத்துதல்

10 குளிர்கால அஞ்சல்: பருவகாலங்களைக் கடந்த சேவை

12 சிறப்பம்சங்கள்

13 அஞ்சல் தலைகள் சேகரிப்பு மூலை: அஞ்சல் தலைகளும், கதைகளும்

19 முக்கிய அம்சங்கள்

# இந்திய அஞ்சல் துறையின் முதுகெலும்புடன் ஓர் உரையாடல்




மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் துறை மற்றும் வடகிழக்குப் பகுதி களின் மேம்பாட்டு வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்திய எம். சிந்தியா அவர்கள், பிப்ரவரி 20, 2026 ஆம் தேதியன்று சஞ்சார் பவனில் பல்வேறு அஞ்சல் வட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அஞ்சல் பிரிப்பு அலுவலர்கள், அஞ்சல் உதவியாளர்கள் 30 பேருடன் ஒரு கலந்துரையாடல் அமர்வைத் தலைமை வகித்து நடத்தினார். இந்திய அஞ்சல் துறையின் செயலாளர், அஞ்சல் சேவைகள் பொது இயக்குநர் உள்ளிட்ட முதுநிலை அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது, "இந்திய அஞ்சல் துறையின் முதுகெலும்புகள்" என்று அஞ்சல் உதவியாளர்களையும், அஞ்சல் பிரிப்பு அலுவலர்களையும் விவரித்தார். கடைசி மைல் இணைப்புத்திறனை உறுதி செய்வதிலும், நாடு நெடுகிலும் குடிமக்களை மையமிட்டுள்ள சேவைகளை வழங்குவதிலும் இவ்விரு பிரிவு ஊழியர்களின் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை ஏற்று அங்கீகரித்துப் புகழ்ந்தார்.



மேற்கண்ட கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் பின் வரும் முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறையாக்க அம்சங்கள் மற்றும் தொழில் நுட்பவியல் சார்ந்த அம்சங்கள் ஆகியவற்றின் மீது கவனங் குவித்திருந்தன. போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பேங்க்(POSB), தகவல் தொழில்நுட்பம்(I T) 2.0 -இன் கீழ் தொழில் நுட்பவியல் திறன்களைத் தரமுயர்த்துதல், பி எல் ஐ \ ஆர் பி எல் ஐ செயலாக்க முறைமைகள் மற்றும் எண்ணியல் வங்கிச் சேவைகளைப் பெறுவதை எளிமைப் படுத்துதல், ஊரக அஞ்சலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், பார்சல் மற்றும் பின்தொடர்தலுக்கான அமைப்புகளை வலிமைப்படுத்துதல், நுகர்வோரை மையமிட்ட சீர்திருத்தங்கள், புதிய தலைமுறை அஞ்சலகங்களை விரிவாக்கம் செய்தல் - ஆகிய பல அம்சங்கள் குறித்துக் கவனம் குவிக்கப் பட்டது.

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இதே போன்று அஞ்சலக மற்றும் அஞ்சல் பிரிப்பக உதவியாளர்களுடன் தான் மேற்கொண்ட முந்தைய கூட்ட விவாதங்க ளின் போது முன் வைக்கப்பட்ட பல ஆலோசனைகள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு விட்டன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். ஆர் எம் எஸ் அலுவலகங்களை அறிவுக்குப் பொருத்தமானவையாக நவீனப்படுத்துதல், ஒருங்கிணைக்கப்பட்ட பார்சல் மையங்கள், கையாளப்பட்ட ஸ்கேனிங் செயற்பாடுகளின் மிகச் சிறந்தவற்றைப் பயன்படுத்துதல், சந்தைப்படுத்துதல் நிர்வாகிகளைப் பணிகளில் அமர்த்துதல் போன்ற ஏற்பாடுகளில் கவனம் குவித்து சந்தைப்படுத்துதலை வலிமைப்படுத்துதல், ஐ பி பி பி (IPPB) பங்குதார ஏற்பாடுகள் மூலமாக சந்தைகளுடன் இணைக்கப்பட்ட காப்பீட்டு உற்பத்திப் பொருள்கள் பற்றிய விவாதங்களை முன்னெடுத்தல் போன்ற சீர்திருத்தங்க ளைப் பற்றி சிறப்புக் கவனம் பெறும் வகையில் அமைச்சர் எடுத்துரைத்தார்.

# ஜி டி எஸ் சம்மேளனம்: குண்டூர் மற்றும் உஜ்ஜயினி:



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

2026, பிப்ரவரி 22 - ஆம் நாளன்று, குண்டூரில் ஆந்திரப்பிரதேச அஞ்சல் வட்டம் ஒரு பெரும் கிராமின் டாக் சம்மேளனத்திற்கு(GDS) ஏற்பாடு செய்து நடத்தியது. அஞ்சல் வட்டம் நெடுகிலுமிருந்து வந்து பங்கேற்ற 9,000 த்திற்கு மேற்பட்ட கிராமின் டாக் சம்வாட்டுகளின் உத்வேகம் நிறைந்த பங்கேற்பை இங்கு காண முடிந்தது. மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் துறை மற்றும் வடகிழக்குப் பகுதிகளின் மேம்பட்டு வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்திய எம். சிந்தியா அவர்கள், ஆந்திரப்பிரதேசத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள்,மாண்புமிகு தகவல் தொடர்புகள் மற்றும் ஊரக மேம்பாட்டு வளர்ச்சித்துறை ராஜீய அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திர சேகர் உள்ளிட்டோர் ஏனைய முக்கியபிரமுகர்களுடன் வருகை தந்து இந்த சம்மேளனத்தைச் சிறப்புமிக்கதாக ஆக்கினர். அஞ்சல் நிதியியல் மற்றும் சமூகவியல் சேவைகளை வழங்குவதில் நிபுணத்துவமிக்க செயற்திறன் வெளிப்பாட்டுடன் ஆகச் சிறந்த பணியாற்றிய பத்துக் கிராமின் டாக் சேவக் குகள் இந்தச் சம்மேளனத்தின் போது பாராட்டப்பட்டுக் கவுரவிக்கப்பட்டனர்.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



2026, பிப்ரவரி 24-ஆம் தேதியன்று மத்தியப்பிரதேசத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு மோகன் யாதவ் அவர்களின் சிறப்புமிக்க முன்னிலையில் மாண்புமிகு தகவல் தொடர்புகள் துறை அமைச்சர் திரு.ஜோதிராதித்திய எம். சிந்தியா அவர்கள், கிராமின் டாக் சேவக்குகளுடனான தனது ஈடுபாடு மிக்க உறவைத்தொடரும் வகையில், மத்தியபிரதேச மாநிலம், உஜ்ஜயினியிலுள்ள கார்த்திகை மேளா மைதானத்தில் நடந்த பெரும் GDS சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றினார். மாநிலம் முழுவதிலும் இருந்து 7,000 த்திற்கும் அதிகமான கிராமின் டாக் சேவக்குகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர். அஞ்சல், வங்கியியல் மற்றும் காப்பீட்டுச் சேவைகளைக் கடைசி மைல் வரை கொண்டு சேர்ப்பதில் GDS ஊழியர்களின் முதன்மையான பங்களிப்பைப் பாராட்டிக் கவுரவவிக்கும் வகையில் இந்தச் சம்மேளனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவினுடைய அஞ்சல் துறையின் ஊரக அஞ்சல் வலைப்பின்னல் அமைப்பின் முதுகெலும்பாக விளங்கும் கிராமின் டாக் சேவக்குகளில் மிகச் சிறப்பான முன்னுதாரண செயற்பாட்டுத்திறன்களை வெளிப்படுத்திக்காட்டிய பத்து GDS ஊழியர்களின் கடப்பாட்டுறுதியை அடிகோடிட்டுக் காட்டும் வகையில் பாராட்டிக் கவுரவிக்கப்பட்டனர்.

இந்தப்பெருந்திரள் கூட்டத்தினரிடையே உரையாற்றுகையில், கிராமின் டாக் சேவக்குகளே இந்திய அஞ்சல் துறையின் உண்மையான தூதுவர்கள் என்று விவரித்த மாண்புமிகு மத்திய அமைச்சர், ஊரகச் சேவைகள் வழங்கலில் அவர்களே முதன்மையான படைவீரர்கள் என்று அவர்களைக் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசினார். கடிதங்கள், சூழல் துணையமைப்புகள், நிதியியல் உள்ளாக்கம் ஆகிய பணிப்பிரிவுகளில் இந்திய அஞ்சல் துறையின் விரிவாக்கம் செய்யப்பட்டுக் கொண்டு வரும் நவீனமயமாக்கப்படும் முயற்சிகள் குறித்து அடிக்கோடிட்டுக் காட்டினார். அஞ்சல் துறையில் மேற்கொண்டு செய்யப்பட வுள்ள உருமாற்றங்களில் சீர்திருத்தம், செயற்திறன் வெளிப்பாடு, உருமாற்றம் ஆகியவற்றை மந்திரங்களாக முன்வைத்துள்ள மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியின் சொற்களையும் நினைவுகூர்ந்தார்.

## கலாச்சாரங்களை இணைத்தலும் மனங்களுக்கு உத்வேகமூட்டுதலும்



தகவல் தொடர்புகள் துறை மற்றும் வடகிழக்குப் பகுதிகளின் மேம்பாட்டு வளர்ச்சித்துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜோதிராதித்திய எம். சிந்தியா, 2026 பிப்ரவரி 17 அன்று நியூசிலாந்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுடனும், திரு. நிக் புக்கர் அவர்களுடனும் கலந்துரையாடினார்.

இந்த உரையாடலின் போது, உலகில் எந்த வலைப்பின்னல் அமைப்பும் இந்திய அஞ்சல் துறையின் சென்றடையும் பரப்பளவு, விநியோகத் திறன் மற்றும் சேவை வழங்கும் திறனை ஒப்பிட முடியாது என்று அமைச்சர் வலியுறுத்தினார். மேலும் அனைத்து B2C வணிகங்களுக்கும் முன்னணி சூழல் துணையமைப்பு கள் நிறுவனமாக இந்திய அஞ்சல் துறையை மாற்றுவதற்கான தனது தொலை நோக்குப் பார்வையை அவர் பகிர்ந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் இந்தியாவின் செழுமையான கலாச்சாரம், வரலாறு மற்றும் எல்லைகளைத் தாண்டியும் வேரூன்றியிருந்த அதன் நாகரிகத்தைப் பற்றியும் வெளிப்படுத்திக் காட்டிப் பேசினார். இந்தியாவின் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் ஆராய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியிருந்த அந்த மாணவர் குழுவை அவர் பாராட்டினார். மேலும் அவர்களின் கல்வி மற்றும் கலாச்சார ஆய்வு முயற்சிகளுக்காகத் தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

## அஞ்சல் வட்டங்களின் செயல்திறன் ஆய்வு




தகவல் தொடர்புகள் துறையின் மாண்புமிகு ராஜீய அமைச்சர் டாக்டர் சந்திர சேகர் பெம்மசானி, 2026 பிப்ரவரி 16 மற்றும் 17 தேதிகளில் அஞ்சல் துறையின் பல அஞ்சல் வட்டங்களின் செயல்பாட்டுத் திறன் வெளிப்பாடு மற்றும் நிதியியல் செயல்திறனை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு & காஷ்மீர், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், பீகார், அசாம், ஒடிசா மற்றும் தமிழ்நாடு ஆகிய அஞ்சல் வட்டங்கள் பற்றிய செயல்திறன் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

தெலங்கானா அஞ்சல் வட்டத்தின் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள சிறந்த செயல்திறனை அமைச்சர் பாராட்டினார். மேலும் மற்ற அஞ்சல் வட்டங்களும் "தொழில் நுட்பம் -முதன்மையானது " மற்றும் "நுகர்வோர் நுண்ணுணர்வுச் சேவை" என்ற அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும் வெளிப்படைத்தன்மை, விரைவான குறைதீர் நடவடிக்கைகள், வலுவான நிதி ஒழுங்கு ஆகியவை உள்ளிட்ட தரமான அஞ்சல் சேவைகள் நாடு முழுவதிலும் சீராக வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

## இந்திய அஞ்சல்துறையின் எண்ணியல் எதிர்காலத்தை வடிவமைத்தல்:




தகவல் தொடர்புகள் துறையின் மாண்புமிகு மாநில அமைச்சர் டாக்டர் சந்திர சேகர் பெம்மசானி, 2026 பிப்ரவரி 12 அன்று மார்க்கெட்டிங் பிரிவு மற்றும் தலைமை மார்க்கெட்டிங் அதிகாரியுடன் ஒரு கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் இந்திய அஞ்சல் துறையின் எண்ணியல் எதிர்காலச் சந்தைப் படுத்துதல் திறன் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தின் போது துறையின் சந்தைப்படுத்துதல் உத்தியை அமைச்சர் ஆய்வு செய்து, அதன் சேவைகளைப் பரவலாகப் பொது மக்களிடம் வலிமையுடன் கொண்டு சேர்க்கும் வழிகளைப் பற்றி ஆலோசனை நடத்தினார்.

இந்த விவாதங்களில் இந்திய அஞ்சல் துறையினால் வழங்கப்பட்டு வரும் பல்வேறு சேவைகளின் விரிந்து பரந்த வீச்செல்லையை மேலும் மேலும் விரிவு படுத்துவது குறித்தும், எண்ணியல் சந்தைப்படுத்துதலை உந்தித்தள்ளி முன்னேற்றுவது குறித்தும் கவனம் குவிக்கப்பட்டது. மேலும் அதிகமான வாடிக்கையாளர்களின் அடித்தளத்துடன் இணைப்புகளைச் சென்றடைய எண்ணியல் பரவலாக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும், அதன் மூலம் துறையின் வருவாய் உருவாக்கத்தை அதிகரிப்பதில் உதவ வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

## கர்நாடகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிகளைக் குறிப்பதாக அமைந்த பொது இயக்குநரின் பயணம்




அஞ்சல் சேவைகள் பொது இயக்குநர் திரு. ஜிதேந்திர குப்தா, 2026 பிப்ரவரி மாதத்தில் கர்நாடக அஞ்சல் வட்டத்தைப் பார்வையிட்டார். இந்தப் பயணம், சேவை வழங்கலையும் நிதி உஉள்ளாக்கத்தையும் வலுப்படுத்தும் பன்முக நடவடிக்கைகளுக்கான முஉன்னெடுப்புகளை உள்ளடக்கியது.
2026, பிப்ரவரி 16 அன்று மடிகேரி தலைமை அஞ்சலகத்தில் டாக் சமுதாய மேம்பாட்டு வளர்ச்சித் (DCDP) திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். மேலும் அங்கு பணியாளர்களுடனும், வாடிக்கையாளர்களுடனும் கலந்துரையாடினார். SCSS, PPF, SSA மற்றும் MIS திட்டங்களின் கீழ் பாஸ் புத்தகங்களை வழங்கினார்.
கொடகு பிரிவு PLI/RPLI துறையில் நிகழ்த்தியிருந்த சாதனைகளையும் அவர் பாராட்டினார்.



இந்தப் பயணத்தின் போது பேலூரில் உள்ள மவுண்ட் கார்மல் பள்ளி மாணவர் களுடன் அவர் உரையாடி இந்திய அஞ்சல் துறையின்எண்ணியல் முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும் மாணவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் ஆதார் பதிவு மற்றும் புதுப்பிப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு குடிமக்களை மையமிட்ட சேவைகள் அவர்களைச் சென்று சேருவதற்கான எளிய அணுகல் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. .

## 38வது அகில இந்திய அஞ்சல் துறைக் கலாச்சாரச் சந்திப்பு:







வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

38வது அகில இந்திய அஞ்சல் கலாச்சாரச் சந்திப்பு 2026 பிப்ரவரி 16 முதல் 20 வரை மைசூரிலுள்ள கர்நாடக அஞ்சல் வட்டத்தின் அஞ்சல் துறைப் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடு முழுவதிலிருந்தும் பல அஞ்சல் வட்டங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு கலாச்சாரம், படைப்பாற்றல் மற்றும் தோழமையுணர்வை உயிர்ப்பு மிக்க விதத்தில் கொண்டாடினர்.

இந்த நிகழ்வை அஞ்சல் சேவைகள் டைரக்டர் ஜெனரல் திரு ஜிதேந்திர குப்தா தொடங்கி வைத்தார். நிகழ்வில் புகழ்பெற்ற வயலின் கலைஞர்கள் மைசூர் எம். நாகராஜ மற்றும் மைசூர் எம். மஞ்சுநாத் (மைசூர் பிரதர்ஸ்), கர்நாடக அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு கே. பிரகாஷ் மற்றும் பல முக்கியப் பிரபல விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்பாளர்கள் பன்முகக் கலாச்சாரத் திறமைகளை வெளிப்படுத்தினர். இது இந்திய அஞ்சல் துறைக் குடும்பத்தின் செழுமையான பாரம்பரியத்தையும் ஒற்றுமையையும் பிரதிபலித்தது.இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் ஒரு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது. நிறைவு விழாவில் பத்மஸ்ரீ விருது பெற்ற பண்டிட் எம். வெங்கடேஷ் குமார் கலந்து கொண்டார்.இந்தப் போட்டிகளில் கேரள அஞ்சல் வட்டம் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தைப் பெற்றது. கர்நாடக அஞ்சல் வட்டம் ரன்னர் - அப் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்கண்ட நிகழ்ச்சி, இந்தக் கலாச்சார விழாவின் நிறைவைக் குறிக்கும் விதமாக அமைந்திருந்தது.

## இந்திய - பிரேஸில் அஞ்சல் கூட்டிணைந்த உறவு:




அஞ்சல் துறைப்பிரிவில் கூட்டிணைந்த உறவை வலிமைப்படுத்துவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும்,பிரேஸிலும் 2026,பிப்ரவரி 22 - ஆம் தேதியன்று கையொப்பமிட்டுள்ளன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியத் தகவல் தொடர்புகள் துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஜ்யோதி ராதித்திய எம்.சிந்தியா மற்றும் பிரேஸில் தகவல் தொடர்புகள் துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு. FREDERICO De Siqueira Filho ஆகிய இருவருக்கும் இடையே பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டது. இந்தியாவுக்குப் பிரேஸில் நாட்டின் குடியரசுத்தலைவர் அரசுமுறைப் பயணமாக வருகை தந்திருந்ததையொட்டி இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

உள்ளாக்கத் தன்மையுள்ள அஞ்சல் சேவை வழங்கல், எண்ணியல் உருமாற்றம், அஞ்சல் சேவைகள் ஆகியவற்றில் கவனங்குவிக்கும் நோக்கத்தில், இந்திய அஞ்சல் துறைக்கும், பிரேஸில் தகவல் தொடர்புகள் அமைச்சகத்திற்கும் இடையே கூட்டு ஒத்துழைப்புக்கான ஒரு முழுமையான சட்டகம் ஒன்றை நிறுவுவதையே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## இந்திய அஞ்சல் துறைக்கும், லா போஸ்ட் நிறுவன அமைப்புக்கும் இடையே குறிக்கோள் கடிதம் கையெழுத்திடப்பட்டிருக்கிறது:



இந்திய அரசாங்கத்தின் தகவல் தொடர்புகள் அமைச்சகம், இந்திய அஞ்சல் துறை,பிரான்ஸ் நாட்டின் La Post நிறுவன அமைப்புடன் ஒரு குறிக்கோள் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளது. அஞ்சல் துறைப்பிரிவில் இரு தரப்பிற் கிடையே ஒத்துழைப்பை வலிமைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கில் இது அமைந்துள்ளது. சர்வதேச அஞ்சல் சேவைகள், எல்லைகள் கடந்த மின் -வர்த்தகம் சார்ந்த சூழல் துணையமைப்புகள்,தொழில் நுட்பம், அஞ்சல் சேவை நடவடிக்கைகளில் புத்துருவாக்கம்,, அஞ்சல் தலைகள் சேகரித்தல் கலை - ஆகிய அம்சங்களில் ஒன்றிணைந்த கூட்டுறவை அதிகரிப்பது உள்ளிட்ட விஷயங்களிலும் இக்குறிக்கோள் கடிதம் கவனம் குவித்துள்ளது. இந்த ஒப்பந்தம், அந்தந்த நாடுகளின் தேசிய ஒழுங்காற்று முறைக்கட்டுப்பாடுகளுக் குட்பட்டு அவற்றுடன் ஒத்திசைந்துள்ள மிகச் சிறந்த செயல் நடைமுறைகள், அனுபவங்கள் ஆகியவற்றைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதன் மூலம் அஞ்சல் சேவையாற்றுவோரின் பன்முக அடுக்குகளின் அமைப்பில் ஒன்றிணைந்த ஈடுபாட்டை முன்னெடுத்துச் செல்ல உதவும் வகையில் இருதரப்பினரும் தத்தம் தனித்தனித் திறன்களை ஒருமுகப்படுத்திச் செயலாற்றுவதை இலக்காகக் கொண்டிருக்கிறது. இந்திய அஞ்சல் துறையின் பொது இயக்குநர் திரு.ஜித்தேந்திர குப்தாவுக்கும், லா - போஸ்ட் நிறுவமைப்பின் முதன்மைச் செயல் நிர்வாக அலுவலர் திருமதி Marie - Ange வுக்கும் இடையே இக்குறிக்கோள் கடிதம் கையெழுத்திடப்பட்டது. இந்தியாவின் சார்பில் சர்வதேச உறவுகள் மற்றும் உலகளாவிய வர்த்தகத்துறையின் துணைப்பொது இயக்குநர் திரு. லக்ஷ்மிகாந்த தாஸ் மற்றும் பிரான்ஸ் நாட்டைப்பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஐரோப்பிய மற்றும் சர்வதேச உறவுகள் துறையின் இயக்குநர் திரு. Jean Paul Forceville ஆகிய இருவரும் ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர். இது, இந்திய - பிரெஞ்சு அஞ்சல் துறை ஒத்துழைப்பை மேலும் ஆழமானதாக ஆக்கும் திசைவழியில் ஒருகுறிப்பிடத்தகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அடிவைப்பைக் குறிப்பதாக அமைந்தது.

## இந்திய அஞ்சல் துறையும், எமிரேட்ஸ் அஞ்சல் துறையும் EMS தரநிர்ணய ஒப்பந்தத்திற்கு ஏற்பளித்து ஒப்புக்கொண்டன




இந்திய - யு ஏ இ (UAE) அஞ்சல் துறைகள் சார்ந்த ஒண்டிணைந்த கூட்டுச் செயல்பாடுகளில் ஒரு புதிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், இந்திய அஞ்சல் துறையும் எமிரேடஸ் அஞ்சல் துறையும் இ எம் எஸ் தர நிர்ணய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்விரு நாடுகளுக்குமிடையே விரைவுக் கடிதங்களின் சேவையை அதிகரித்துக் கொள்ள இது வகை செய்யும். மேலதிகம் செலவு குறைவான, ஐக்கிய அரபு எமிரேட்ஸிடமிருந்து இந்தியாவுக்கு விளிம்பு களற்ற மற்றும் செயற்திறன் மிக்க கப்பல் சரக்குப்போக்குவரத்துகளையும், எல்லைகள் கடந்த மின் - வர்த்தகம், ஏற்றுமதிகள்,, எம் எஸ் எம் இ பங்கேற்பு ஆகியவற்றையும் இது சாத்தியப்படுத்தும். சர்வதேசப் பங்குதாரர் ஏற்பாடு களை விரிவாக்கம் செய்வது, சுறுசுறுப்பு மிக்க, வாடிக்கையாளர்களை மையமிட்ட சூழல் துணையமைப்புகள் சார்ந்த தீர்வுகளை வழங்குவது ஆகியவற்றின்பால் இந்திய அஞ்சல்துறையின் கடப்பாட்டுறுதிக்கு இந்த மேம்பாட்டு வளர்ச்சி கூடுதல் வலிமை சேர்க்கும்

## இந்திய அஞ்சல்துறை - என் எஸ் இ கூட்டிணைவு:



அஞ்சல் துறை, நேஷனல் ஸ்டாக் எக்ஸேஞ் ஆஃப் இந்தியா (NSE) லிமிட்டெட் நிறுவனத்துடன் 2026, பிப்ரவரி 10 - ஆம் தேதியன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்திய அஞ்சல் துறையின் 164 இலட்சத்திற்கு மேற்பட்ட அஞ்சல் நிலையங்களின் விரிந்து பரந்த வலைப் பின்னல் அமைப்பின் மூலமாக பரஸ்பர நிதி உற்பத்திப்பொருள்களுக்கான அணுகல் வழிகளை விரிவு படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த ஒப்பந்தம். குடிமக்களை மையமிட்ட சேவைகள் மற்றும் ஊரக வர்த்தகங்கள் துறையின் பொது மேலாளர் திருமதி. மணீஷா பன்சால் பாதல் மற்றும் என் எஸ் இ அமைப்பின் முதன்மை வர்த்தக மேம்பாட்டு வளர்ச்சி அலுவலர் திரு ஸ்ரீராம் கிருஷ்ணன் ஆகிய இருவரும் இந்திய அஞ்சல் துறை மற்றும் என் எஸ் இ அமைப்பின் முதுநிலை அலுவலர்களின் முன்னிலையில் மேறகண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இந்தப் பங்குதாரர் ஏற்பாடு, தேர்ந்தெடுக்கப்பட்ட அஞ்சல் அலுவலர்களைப் பயிற்றுவித்து, பரஸ்பர நிதி விநியோகிப்பாளர்களாகச் சான்றளித்து அவர்களை நியமிப்பதற்கு வகை செய்கிறது. ஊரக, அரை நகர்ப்புற மற்றும் நகர்ப்புற மையங்களில் முதலீட்டாளர்களுக்கான சேவைகளை வழங்குவதை இது சாத்தியப்படுத்தும். அதே வேளையில், வெளிப்படைத்தன்மையையும், ஒழுங்காற்று முறைக் கட்டுப் பாடுகளைக் கடைப்பிடிப்பதையும் இது உறுதி செய்யும். இந்த ஒன்றிணைவுச் செயற்பாடு, நிதியியல் உள்ளாக்கத்தை மேலும் ஆழமாக்குவதையும், முதலீட்டா ளர்களின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், மூலதனச் சந்தையோடு இணைப்புக் கொண்ட நிதியியல் தீர்வுகளுக்குப் பரந்த அணுகல் வழிகளைக் குடிமக்களுக்கு வழங்கவும் இலக்குகளைக் கொண்டிருக்கிறது.

## அஞ்சல் தலைகள் கண்காட்சி - துபாய் 2026 -இல் இந்திய அஞ்சல் துறை:




இந்திய அஞ்சல் துறை, உலக அஞ்சல் தலைகள் கண்காட்சி, துபாய் - 2026 இல் பங்கேற்றிருந்தது. அதோடு, ஐ சி சி ஆண்கள் T 20 உலகக்கோப்பை -2026 க்கான தொடக்க நிகழ்வைக்குறிக்கும் வகையில், 2026, பிப்ரவரி 7 -ஆம் தேதியன்று ஒரு சிறப்பு அஞ்சல் உறை, அஞ்சல் தலைகள் சேகரித்தல் மற்றும் சந்தைப்படுத்து தல் பிரிவின் துணைப்பொது இயக்குநர்(DDG) திருமதி. ராஷி சர்மா அவர்களால் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் இந்தியத் தூதர் திரு.சதீஷ் குமார் சிவன், தபால் தலைகள் சேகரித்தல் மற்றும் சந்தைப் படுத்துதல் பிரிவின் இயக்குநர் திருமதி. பிரியங்கா மிஸ்ரா, ஏனைய சிறப்பு விருந்தினர்களின் பங்கேற்பு விழாவிற்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்தது. இப்படியான சிறப்புக் கொண்டாட்ட வெளியீடுகளின் மூலம் அஞ்சல் தலைகள் சேகரிததலை முன்னெடுப்பதிலும், முதன்மையான உலகளாவிய விளையாட் டுப் போட்டிகளைக் கொண்டாடுவதிலும் தொடர்ந்து இந்திய அஞ்சல் துறை கொண்டுள்ள கடப்பாட்டுறுதி வெளிப்பட்டுத் தெரிகிறது.

## புதிய தலைமுறை அஞ்சலகங்கள்: வாடிக்கையாளர்களின் அனுபவங்களைப் புதிய உருவில் மாற்றியமைத்தல்







இந்திய அஞ்சல் துறை தன்னுடைய நவீனமயமாக்கலின் செயலாக்க முனைப் பியக்கத்தின் ஒரு பகுதியாக, நாடு முழுவதிலும் புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்களின் வலைப்பின்னல் அமைப்பை விரிவுபடுத்திக் கொண்டு வருகிறது. விரைவான, செயற்திறன் மிக்க, வாடிக்கையாளர் நட்புணர்வு மிக்க சேவைகளை மக்களுக்கு வழங்குவது இதன் குறிக்கோள். மிக நவீனத்துவம் வாய்ந்த எண்ணியல் உள் கட்டமைப்பு வசதிகள், நவீன உட்புற அழகியல் அமைப்புகள், முன்னேற்றமடைந்துள்ள சேவைக்கவுண்ட்டர்கள் ஆகியவற்றின் மூலம் தங்களைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டுள்ள புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள், வாடிக்கையாளர்களுக்கு விளிம்புகளற்ற, மிகவும் வசதி யான அனுபவங்களை வழங்குகின்றன.

2026, பிப்ரவரி 28 - ஆம் நாள் நிலவரப்படி, 2026, பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்ட இரண்டு உள்பட, மொத்தம் 48 புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள் நாடு முழுவதிலும் தொடங்கப்பட்டுள்ளன. இது சேவைகளை வழங்குவதில் உருமாற்றத்தைக் கொண்டு வருவதை நோக்கிய தனது முயற்சிகளில் இந்திய அஞ்சல் துறை விரைவான உந்துதலைப் பெற்றுள்ளதைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இந்த முன்னெடுப்பு, இந்திய அஞ்சல் துறை நம்பகத்தன்மை வாய்ந்த தன்னுடைய பாரம்பரியப் பெருமையைப் புத்தாக்க முயற்சிகளுடன் கலந்து சேவை புரிய முன்வரும் அதே வேளையில், மிக அதிக அளவிற்கு இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தி, மேலதிக அளவுக்கு அணுகல் தன்மை வாய்ந்த, தொழில்நுட்பங்களால் சாத்தியமாகும் சேவைக ளைப் பெருகி மேலெழுந்து வரும் அவர்களின் எதிர்பார்ப்புகளோடு ஒத்திசைந்தவையாக மாற்றியமைக்க முற்படுகிறது.

## சந்தைப்படுத்திடுதல் பணிமனை: சந்தைப்படுத்தல் செயற்திறன்களை வலிமைப்படுத்துதல்:




இந்திய அஞ்சல் துறை, தற்போது தான் மேற்கொண்டிருக்கும் உருமாற்றமடை யச்செய்யும் பயணத்தின் ஒரு பகுதியாக, டாக் பவனில் ஓர் இரண்டு நாள் கவனம் குவிக்கும் சந்தைப்படுத்திடுதல் பணிமனையை 2026, பிப்ரவரி 10 & 11 தேதிகளில் நடத்தியது. இந்திய அஞ்சல் துறை, தனது சேவைகள் விரிவாக்கத் திட்டத்தின் அடுத்த பகுதிக்காக, துறையின் சந்தைப்படுத்தல் நிர்வாகிகளின் செயற்திறன்களை வலிமைப்படுத்தும் நோக்குடன் இதை நடத்தியுள்ளது. இந்தப் பணிமனை, பின்வரும் குறிக்கோள்களை இலக்காகக் கொண்டுள்ளது: பங்கேற்பாளர்களுக்கு மிக நவீனமான கருவிகளைக் கையாளுவதற்குப் பயிற்றுவிப்பது, செயல் உத்திபூர்வமான உள்ளீடுகள், வணிக வளர்ச்சியை உந்தித்தள்ளுவதற்கு அதிகரிக்கப்பட்ட ஆளுகை சார்ந்த அறிவு, வாடிக்கை யாளர்களின் திருப்தியை முன்னேற்றுவது, பன்முகப்பட்ட சந்தைகள் நெடுகிலும் புதிய வருவாய்களுக்கான வாய்ப்புகளைத் தேடியடைவது, புத்தாக்கம் மற்றும் சேவை நிபுணத்துவத்தை உசசநிலை அடையுமளவுக்கு அதிகரிப்பதற்கான இந்திய அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதியைக் கூடுதல் வலிமை படைத்ததாக்குவது - ஆகியவையே மேற்கண்ட பணிமனையின் குறிக்கோள்கள்.

## எண்ணியல் பயிற்சியளித்தலுக்கான உள்கட்டமைப்புகளை வலிமைப்படுத்துதல்:



புதுடெல்லி, டாக் பவனில் பயிற்சியளிக்கும் பிரிவு 2026, பிப்ரவரி 24 -ஆம் தேதியன்று ஒரு நாள் திறன் கட்டமைக்கும் பணிமனை ஒன்றை அமைத்து வெற்றிகரமாக நடத்தி முடித்தது. iGOTkarmayogi மேடையில் நடத்தப்படும் பயிற்றுவித்தல் அமர்வுகளுக்கான உள்ளடக்கத்தரத்தை அதிகரிப்பதே இப் பணிமனையின் நோக்கம். இந்தப் பணிமனை, முதுநிலை அதிகாரிகள், உள்ளடக்கங்களை உருவாக்குவோர், பல்வேறு பயிற்சி நிலையங்களிலிருந்து வருகை தந்திருந்த பிரதிநிதிகள் போன்ற பலதரப்பினரையும் ஒருங்கே கொண்டு வந்திருந்தது. தகுதிகளை வரைபடமாக்குதல், கற்பித்தல் முறைமை களின் வடிவமைப்பு, கதைகள் பலகை ஆக்கம், மதிப்பீட்டு முறைகளின் வடிவமைப்பு, பாடத்திட்டங்களைப் பதிப்பிக்கும் செயல்முறைகள் போன்ற பொருண்மைகள் சார்ந்த பயிற்சிகள்-விவாதங்களைக் கர்மயோகி பாரத்துடன் ஒன்றிணைந்து இந்தபணிமனை முன்வைத்தது. இந்த வகையில் மேற்கொள்ளப் பட்ட ஒரு முன்னெடுப்பு இதுவே முதன்முறையாகும். இந்திய அஞ்சல் துறை முழுவதிலும் தகுதிகள் உயர்த்தும் உந்துதளுடன் செயற்திறன்களைக் கட்டமைக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், கட்டமைக்கப்பட்ட, உயர்தரமான, வெளிப்பாடுகள் சார்ந்த மின் - கற்றல் பாடப்பிரிவுகளை மேம்படுத்தும் கூட்டான கடப்பாட்டுறுதிக்கு வலுவூட்டும் ஒன்றாக இந்த முன்னெடுப்பு அமைந்திருந்தது.

## பருவ காலங்களைக் கடந்தும் சேவைகள்: குளிக்காலக் கடிதங்கள்:

பூஜ்யத்திற்கும் குறைந்த டிகிரிகளில் நிலவும் தட்பவெப்ப நிலைகளிலும் கூட, வடக்கிலும், இமாலயப் பகுதிகளிலும் கடுமையான குளிர் மனிதர்களை உறைந்து போகச் செய்து விடும் நிலையில், மிக அதிகப் பனிப் பொழிவிலும், எதிர்பாராத விதங்களில் மறைந்திருக்கும் அபாயகரமான சூழல்களில் கடைசி மைல் வரையிலும் சென்று சேவையாற்றும் இந்தியா அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதி சிறிதும் நிலை தடுமாறாமல் நீடிக்கிறது. மூலை மூடுக்குக ளிலும் நெடுந்தொலை தூரப் பள்ளத்தாக்குகளிலும், பனிமூட்டங்க ளால் மூடப்பட்டிருக்கும் கிராமங்களிலும்தடையேதுமில்லாத கடிதங்கள் பெறல், அத்தியாவசிய சேவைகளைப் பெறுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் அஞ்சல் துறை ஊழியர்கள் அதி தீவிரமான இடையுறுகளையும் பொருட்படுத்தா மல் துணிவுடன் பணியாற்றுகின்றனர். அவர்களுடைய அர்ப்பணிப்புணர்வு, டாக் சேவா ஜன சேவா எனும் முழக்கத்தின் உண்மையான உத்வேகத்தைப் பிரதிபலிக்கிறது. அங்கு, குடிமக்களுக்குச் சேவையாற்றும் குறிக்கோள் ஒன்று மட்டுமே முன்னுரிமை பெற்று, மற்ற எல்லாச் சவால்களையுமே பின்னுக்குத் தள்ளி விடுகிறது.




வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

லடாக், Zanskar ஆகிய இடங்களின் கடுங்குளிர், வாழ்க்கையையே கிட்டத்தட்ட உறைந்து போகும் நிலைக்குக் கொண்டுவந்து விடுகிறது. அந்த நிலையிலும் கூட, திருமதி. டென்ஸின் டோல்மா'வின் தீர்மானகரமான உறுதி இன்னும் வலிமை படைத்ததாகிறது. ஜம்மு & காஷ்மீரில், பாடும் அஞ்சல் நிலையத்தின் அர்ப்பணிப்புணர்வு மிக்க கிராமின் டாக் சேவக் ஆன அவர், பனி மூடிய மலைச் சரிவுகளில், மைனஸ் டிகிரி தட்ப வெப்ப நிலைமைகளில் கூட, அவற்றைப் பொருட்படுத்தாமல் எதிர்கொண்டு, ஒவ்வொரு கடிதமும் அது சென்று சேர வேண்டிய முகவரிக்குப் போயே தீர வேண்டுமென்ற உறுதியுடன் பனி செய்கிறார். ஒரு கடிதத்தை உரியவரிடம் வழங்குவதை அவர் வெறும் கடமையாக மட்டும் கருதவில்லை; மாறாக, மக்களுக்குத் தான் ஆற்ற வேண்டிய உண்மையான சேவையெனக் கருதுகிறார்.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

பனி படர்ந்திருக்கும் பாதைகளின் நடுவிலும், சுமார் - 5 டிகிரிக்குளிரிலும் கிளை அஞ்சல் நிலைய அதிகாரியான திரு. ஆஷிஷ் பூரி உத்தரகாண்ட் மாநிலத்தின் கிமானா கிராமத்தில் நிலையுறுதியுடன் சேவை வழங்கலை ஓர் எடுத்துக்காட் டான விகத்தில் செய்கிறார். கால்கள் வழுக்கி விடக்கூடிய வழிகளில், நிர்ணய கரமான திடமனதுடன் பயணங்களை மேற்கொண்டு,

ஒவ்வொரு வீட்டுக்கதவுக் கும் உரிய கடிதங்களைக் கொண்டு சென்று சேர்க்கிறார். சவால்கள் நிறைந்த புவியியல் சூழ்நிலைமைகளில் கூட, நம்பகத்தன்மை வாய்ந்த சேவைகளை வழங்க உறுதியளித்திருக்கும் இந்திய அஞ்சல் துறையின் வாக்குறுதிகளின் பின்னணியில், அவருடைய அர்ப்பணிப்புணர்வு மனித முயற்சிகளின் வெற்றியை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக உள்ளது






வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

அதி தீவிரக்குளிர், சவால்கள் மிக்க மலைப்பாதைகள் நிறைந்த ஒரு பிரதேசத் தின் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல், ஹிமாச்சல பிரதேசத்தின் ஜிஸ்பா கிளை அஞ்சல் நிலைய அதிகாரி யான திரு. ஷெராப் கால்சான், விதிவிலக் கான, சிறிதும் தளர்வற்ற உறுதியுடன் தனது பணிகளைத் தொடர்கிறார். சில சமயங்களில், அந்தப்பகுதி நெடுக கடும் பனிக்காற்று சுழன்றடிக்கும் போதும், - 22 டிகிரி குளிர் நிலவும் போதும் கூட எத்தகைய கடுமையான சூழ் நிலைமைக ளிலும் பாதிப்புறாமல், குறித்த .

நேரங்களில் மூலை முடுக்குகளிலுள்ள வீடுகளுக் கும் கடிதங்களும், பார்சல்களை சென்று சேருவதை உறுதி செய்கிறார். அவரு டைய இந்த அர்ப்பணிப்புணர்வு, இந்திய அஞ்சல் துறையின் உள்ளுறை மையமான விழுமியங்களை உண்மையிலேயே தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் வாழும் சமூகங்களுக் குச் சேவையாற்றுவதில் இந்திய அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதியையும் நிஜ வடிவில் காட்டுகிறது

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.







வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஜம்மு & காஷ்மீரின் குரெஸ் பள்ளத்தாக்கில் பனிப்பொழிவு மூடிய பகுதியில், மைனஸ் பத்து டிகிரி குளிர் நிலவும் கடுமையான ஒரு தட்ப வெப்ப நிலையில், கிளை அஞ்சல் நிலைய அதிகாரியான திரு. மன்சூர் அஹமத் கான், குறிப்பிடத் தக்க அர்ப்பணிப்புணர்வுடன் தொடர்ந்து சேவையாற்றிக் கொண்டு வருகிறார். கடுமையான குளிர்காலச் சூழல்களிலும் அவற்றைத் துணிவுடன் எதிர் கொள்ளும் அவர், தடையில்லாமல் கடிதங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத் துகிறார். அவர் கொண்டு சேர்ப்பவை வெறும் கடிதங்களை மட்டுமல்ல; மாறாக, சமுதாயத்திற்கு

நம்பிக்கையையும், மீள் உறுதிப்பாட்டையுமே கொண்டு சேர்க்கிறார். அத்தியாவசியச் சேவைகளையும், தகவல் தொடர்புகளையும் எவ்விதக் குறுக்கீடுகளுமின்றிக் கொண்டு சேர்ப்பதை உறுதி செய்வதில் அவருடைய தொடர்ச்சியான அர்ப்பணிப்புணர்வு, இந்திய அஞ்சல் துறையின் பொதுச்சேவை மற்றும் கடப்பாட்டுறுதியின் உண்மையான உத்வேகத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

## சிறப்பம்சங்கள்:



சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூர் பகுதியில் உள்ள குருது கிராமத்தின் திரு. நரோத்தம்ஜி இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மண்பாண்டங்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். பிரதமரின் விஸ்வகர்மா யோஜனாவின் கீழ் ஒரு கருவித் தொகுதிப் பெட்டியை இந்திய அஞ்சல் துறை மூலம் அவர் பெற்றிருக்கி றார். அவருடைய கைவினைத் தொழிற்திறனின் செயற்திறனையும், உற்பத்தித் திறனையும் இது அதிகரித்துத் தந்திருக்கிறது. இத்தகைய அஞ்சல் பொருள்க ளைப் பாதுகாப்பாகவும், குறித்த நேரத்திலும், வெளிப்படைத்தன்மையோடும் உரியவர்களுக்கு வழங்குவதில் இந்திய அஞ்சல் துறை தன்னுடைய விரிந்து பரந்து நீண்டு அமைந்துள்ள வலைப்பின்னல் அமைப்பையும், தகவல் தொழில்நுட்பங்களில் நவீனமயமாக்கலையும் நெம்புகோல்களாகப் பயன்படுத்தி உறுதி செய்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம், மரபுவழியில் வரும் கைவினைக் கலைஞர்களுக்கு நிலையுறுதியுடன் சுய சார்பு நிலையை நோக்கிப் போவதற்குத் தேவையான வலிமையை வழங்குகிறது.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



சிக்கிம் மாநிலத்திலுள்ள ஒரு தொலைதூரக் கிராமமான கபியில், கபி அஞ்சல் நிலையத்தின் கிளை அஞ்சல் நிலைய அதிகாரியான திருமதி வினிதா ராய் அவர்களின் அர்ப்பணிப்புணர்வு மிக்க முயற்சிகளால், அது ஒரு சம்பூர்ண பீமா கிராமம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவர் தனது அஞ்சல் அலுவலகத்தைச் சுய சார்பு மற்றும் நிதியியல் பாதுகாப்புக்கான மையமாக உருமாற்றியமைத்து, கிராம மக்கள் அனைவரையும் ஆதார் மற்றும் காப்பீட்டுத் திட்டங்களுடன் இணைத்திருக்கிறார். இதன் மூலம், அஞ்சல் மற்றும் பார்சல் சேவைகளுக்கும் அப்பால் சென்று மக்களுக்கு உதவியுள்ளார்.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## அஞ்சல் தலைகள் சேகரிப்புக்கலை: அஞ்சல் தலைகளும், கதைகளும்:






புதுடெல்லியில், டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில், இந்தியாவின் மேதகு குடியரசுத்தலைவரான திருமதி திரவுபதி முர்மு அவர்கள், 2026, பிப்ரவரி 16 அன்று ஒரு சிறப்புக் கொண்டாட்ட அஞ்சல் தலையொன்றை வெளியிட்டார். சந்தாலி மொழிக்கென்று ஓர் எழுத்துருவை உருவாக்கித்தந்த முன்னணி மொழியியல் அறிஞர் குரு கோம்கி பண்டிட் ரகுநாத் முர்மு அவர்களால் 1925 - ஆம் ஆண்டில் "ஓய் சிஹிகி" எழுத்துருவின் நூற்றாண்டு நிறைவைக் குறிப்பதாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. சந்தாலி பழங்குடி சமூகத்தின் கலாச்சாரப் பெருமிதம், இலக்கியச் செழுமை, ஒரு வலிமைமிக்க அடையாளச் சின்னமாக 100 மகோன்னதமான ஆண்டுகளைக் கடந்து நிற்கும் அந்த எழுத்துருவைக் கொண்டாடி மகிழ்ந்தது. அஞ்சல் தலைகள் சேகரிப்புக்கலையின் முன்னெடுப்புகள் மூலம் நாட்டின் மொழியியல் பாரம்பரியம், கலாச்சாரப் பாரம்பரியம் ஆகியவற்றைக் கவுரவிப்பதில் இந்திய அஞ்சல் துறையின் தொடர்ச்சியான பாத்திர வகிப்பினை மேற்கண்ட சிறப்புக் கொண்டாட்ட அஞ்சல் தலை வெளியீடுகள் வெளிப்படுத்திக் காட்டுகின்றன.






2026, பிப்ரவரி 13 -ஆம் தேதியன்று, மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்கள், சேவா தீர்த் குறித்த ஒரு சிறப்புக் கொண்டாட்ட அஞ்சல் தலையினை வெளியிட்டார். புதுடெல்லியில், சென்ட்ரல் விஸ்டா பகுதியினுள் அமைந்துள்ள அரசாங்க அலுவலகங்களின் வளாகம் இது. இந்தியாவினுடைய மிக உயர்மட்ட செயல் நிர்வாகப் பணிகள் அனைத்தையும் ஒருங்கே இணைத்து ஒரு நவீனமான, பாதுகாப்பான , செயற் திறன் மிக்க சூழலில் மேற்கொள்வதற்காக இந்த சேவா தீர்த் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகம், பிரதமரின் அலுவலகம், மத்திய அமைச்சரவையின் தலைமைச் செயலகம், தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் தலைமைச் செயலகம் ஆகிய அனைத்தையும் ஒரே ஓர் ஒற்றை, ஒன்றுபட்ட வளாகத்தினுள் கொண்டு வந்து சேர்த்துள்ளது.







இந்தியக் கடலோரக் காவற்படை, "நாங்கள் பாதுகாப்போம்" எனும் குறிக்கோள் பதாகையின் கீழ் வழங்கி வரும் ஐம்பதாண்டு கால அர்ப்பணிப்புணர்வு மிக்க சேவையைக் கொண்டாடும் வகையில், இந்திய அஞ்சல்துறை ஒரு சிறப்புக் கொண்டாட்ட அஞ்சல்தலையை வெளியிட்டது. இந்த அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்வு, மாண்புமிகு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மாண்பு மிகு பாதுகாப்புத்துறையின் ராஜீய அமைச்சர் திரு. சஞ்சய் சேத், தகவல் தொடர்புகள் துறையின் மாண்புமிகு ராஜீய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. கடலோரக் காவற் படையின் பொன் விழாவினை இந்த விழா சிறப்புடன் கொண்டாடியது. இந்தியாவின் கடற்கரைகளைப் பாதுகாப்பதில் சிறிதும் நிலை குலையாமல் கண்காணிப்புடன், தீரத்துடன், நிபுணத்துவத் தொழிற்திறனுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் கடலோரக்காவற் படையின் பொன்விழாவுக்கு அஞ்சல் தலை வெளியிட்டுப் புகழ் மாலை சூட்டியது, நாட்டின் கடல்களையும், கடற்கரைகளை யம் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கு மவுனமாகக் கால்கள் கடுக்க நின்று கொண்டே பணியாற்றிக் கொண்டிருக்கும் வீரர்களுக்குத் தனது ஆழமான நன்றியறிதலைத் தெரிவிப்பதைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தது.







ஓர் அச்சமற்ற சுதந்திரப்போராட்ட வீரரும், நிபுணத்துவப் புலமை மிக்க ஆயுர்வேத மருத்துவ அறிஞரும், பொதுநலன்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புணர்வுடன் போராடும் பரப்புரையாளருமான திரு. உத்தவ்தாஸ் மேத்தா அவர்களைப் பாராட்டிக் கவுரவிக்கும் வகையில், அவருடைய பங்களிப்புகள் அனைத்தையும் அங்கீகரிக்கும் வண்ணம், இந்திய அஞ்சல் துறை ஒரு சிறப்புக்கொண்டாட்டத் தபால் தலையை வெளியிட்டது. மாண்பு மிகு தகவல் தொடர்புகள் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்திய எம். சிந்தியா அவர்களால் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. நாட்டிற்கு அவர் ஆற்றிய சேவை, அவரின் தீரம் மிக்க வாழ்க்கை, நேர்மை ஆகியவற்றைப் பாராட்டிக் கொண்டாடும் விதமாக இவ்வெளியீடு அமைந்தது.






காலங்களைக் கடந்து நிலைத்திருக்கும் இந்தியப் பொம்மலாட்டக்கலையைக் கொண்டாடிச் சிறப்பிக்கும் வகையில், 2026, பிப்ரவரி 08 - ஆம் தேதியன்று இந்திய அஞ்சல் துறையின் செயலாளர் திருமதி. வந்திதா கவுல் அவர்களால் எட்டு சிறப்புக்கொண்டாட்ட அஞ்சல் தலைகளின் தொகுதியொன்று வெளியிடப் பட்டது. இந்தத் தொகுப்பிலுள்ள படங்கள், பொம்மலாட்டங்களின் பல்வேறு மரபு வழிப்பட்ட வடிவங்களை, அவற்றின் பாரம்பரிய மரபுகளைப் பிரதிபலிப்ப வையாக அமைந்துள்ளன. நூல், குச்சி அல்லது கம்பி, கையுறை, அல்லது நிழல் ஆகியவற்றினால் நடத்தப்படும் பொம்மலாட்டங்கள் உள்ளிட்டு வெவ்வேறு வகையான கலை வடிவங்களைப் பிரதிபலிக்கும் படங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த வட்டாரப் பாணிகளையும், செழுமையான கலாச்சார வெளிப்பாடுக ளையும் சித்தரித்துள்ளனர். இந்தத் தொகுதியோடு, முதல் நாள் உறை, விளக்கப் படச் சுவடி, மினியேச்சர் ஷீட், ஷீட் இல்லாத ஆனால் ஒரு சிறப்புக் கேன்சலேஷன் ஆகிய சிறப்பு வெளியீடுகளும் சேர்ந்த இந்த வெளியீட்டு விழா, இந்தியாவின் நிலைத்த கதை சொல்லும் பாரம்பரியத்தையும், உயிர்ப்பாற்றல் மிக்க இக்கலை வடிவத்தைப் பாதுகாத்துக் கொண்டே வந்திருக்கும் எத்தனையோ பல தலைமுறைகளைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்களையும் போற்றிப் பாராட்டிக் கவுரவிக்க நடந்த நிகழ்ச்சியாக அமைந்தது.




மும்பை ஜியோ கன்வென்ஷன் மையத்தில், மும்பையின் காலநிலை வாரம் பற்றிய கஸ்டமைஸ்ட் மை ஸ்டாம்ப் ஒன்றை 2026, பிப்ரவரி 17 - ஆம் தேதியன்று இந்திய அஞ்சல் துறை வெளியிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையமைச்சர் திரு. ப்ரகலாத் ஜோஷி அவர்கள், மகாராஷ்டிராவின் மாண்புமிகு முதல்வர் திரு. தேவேந்திர பட் னாவிஸ் அவர்கள், மகாராஷ்டிரா மாநில சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திருமதி.பங்கஜா முண்டே அவர்கள், மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு.அமிதாப் சிங் மற்றும் பிரபலமான சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சுற்றுச்சூழல் நிலையுறுதித்தன்மை, காலநிலை சார் பொறுப்புணர்ச்சி ஆகியவை தொடர்பான மும்பையின் கூட்டுக் கடப்பாட்டுறுதியைக் குறியீட்டு வடிவில் குறிப்பதாக இந்தச் சிறப்பு அஞ்சல் தலை உள்ளது.





இந்தியாவில் MAGGI உணவின் ஐம்பது ஆண்டுகளைக் குறிக்கும் ஒரு கஸ்டமைஸ்ட் மை ஸ்டாம்ப் இந்திய அஞ்சல் துறையின் மூலம் வெளியிடப் பட்டது. மாண்புமிகு உணவு தயாரிப்புச் செயல்முறைகள் சார தொழிற்சாலை கள் துறையின் மத்திய அமைச்சர் திரு. ஷிராக் பஸ்வான் முன்னிலையில், இந்த மைல்கல் சாதனையைக் குறிக்கும் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. சிறப்பு அஞ்சல் தலைகள் சேகரிப்புக்கான இந்த வெளியீடு, பிரபலமாகி விட்ட ஒரு பிராண்ட் உணவின் நிலைத்திருக்கும் இருப்பைக் கொண்டாடுவதாக அமைந்தது. மலைகளில் நிகழும் தருணங்கள் தொடங்கி, பருவமழைக்கால மாலைகள் வரை, பின்னிரவு வேளைகளில் கடும் பசியைப் போக்கும் சமயங்களுக்கு என எண்ணற்ற சந்தர்ப்பங்களில் மாகியின் இருப்பு சிறப்பு மிக்கது என இது நினைவு கூர்கிறது





லக்னோவின் மக்கள் பவன் அரங்கில் 2026,பிப்ரவரி 6 - ஆம் நாளன்று மலர்க் கண்காட்சியின் தொடக்க விழாவைக் குறிப்பிடும் வகையில், ஒரு சிறப்பு அஞ்சல் உறை, சிறப்புக் கேன்சலேஷன், நான்கு அஞ்சலட்டைகளின் ஒரு தொகுதி ஆகியவை உத்தரப்பிரதேசத்தின் மேதகு ஆளுநரான திருமதி. ஆனந்திபென் படேல், மாண்புமிகு தோட்டக்கலைத் துறை அமைச்சர் திரு. தினேஷ்குமார் சிங், லக்னோ மண்டலத்தின் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. சுனில் குமார் ராய் ஆகிய சிறப்பு விருந்தினர்களால் வெளியிடப்பட்டன.







சத்ரபதி சிவாஜி மகராஜின் எவராலும் வெல்லமுடியாத பாரம்பரியச் சிறப்பைப் போற்றிக் கொண்டாடும் படங்கள் நிறைந்த அஞ்சலட்டைகள் 2026, பிப்ரவரி 19 - ஆம் நாளன்று இந்திய அஞ்சல் துறையின் செயலாளர் திருமதி. வந்திதா கவுல் அவர்களால் வெளியிடப்பட்டன. இந்தச் சிறப்பு வெளியீடு, மாபெரும் மராத்தி யப் போராளுமை அரசரான சிவாஜியின் நிலைத்து நிற்கும் பங்களிப்புகளை, தொலைநோக்குப்பார்வையுடைய தலைமைத்துவத்தை, தீரத்தைப் போற்றிக் கவுரவிக்கிற விதத்தில் அமைந்தது. நல்ல ஆளுகை மற்றும் குடிமக்களை மையமிட்ட நிர்வாகம் போன்ற அவருடைய இலட்சியப்பண்புகள் பல தலைமுறைகளைத் தாண்டியும், இன்றும் உத்வேகம் ஊட்டக்குடியவையாகவே இருந்து வருகின்றன.





இந்திய அஞ்சல் துறைச் செயலாளர் திருமதி.வந்திதா கவுல் அவர்கள் ஹோலிப் பண்டிகையின் அம்சங்களைக் கருப்பொருளாகக் கொண்ட படங்கள் நிறைந்த அஞ்சலட்டைகளின் தொகுதியொன்றை 2026, பிப்ரவரி 27 - ஆம் நாளன்று வெளியிட்டார். உயிர்ப்பாற்றல் மிக்க இப்பண்டிகையின் உத்வேகத்தைக் கொண்டாடுவதாகவும், காலங்களைக் கடந்தும் நிலைத்திருக்கும் இதயப்பூர்வ மான தகவல் தொடர்புக் கலையைப் போற்றுவதாயும் இது அமைந்திருந்தது. நேசிக்கப்படுவோரின் இதயங்களை இணைக்கும் வகையில், திருவிழாக் கொண்டாட்டத்தன்மையுடன் மரபார்ந்த அம்சங்களைக் கலந்து, ஒன்றிணைந் திருத்தல், ஆனந்தம், நேசிப்பின் வெதுவெதுப்பு ஆகியவற்றின் வண்ணங்களை நாடு முழுமைக்கும் இந்த அஞ்சலட்டைகள் கொண்டு சேர்ப்பவையாக இருந்தன. உண்மையிலேயே பொருள் பொதிந்த விதத்தில் நேசிக்கப்படு வோரை ஒன்றிணைப்பவை இவை.




சத்ரபதி சிவாஜி மகராஜின் பிறந்த நாளையொட்டி கர்நாடக அஞ்சல் வட்டம், ஒரு சிறப்புப் புகைப்பட அஞ்சலட்டையையும், சிறப்புக் கேன்சலேஷனையும் 2026, பிப்ரவரி 19 அன்று வெளியிட்டது. மாபெரும் போராளுமை மராத்தா அரச ரான சத்ரபதி சிவாஜி மகராஜ் பிறந்த நாள் சிறப்புக் கொண்டாட்டங்களை இது போற்றியது. இது, அவரின் தீரம், தொலைநோக்குப்பார்வையுள்ள தலைமைத் துவம், பராக்கிரமம் ஆகியவற்றைக் கவுரவிப்பதுடன், எண்ணற்ற தலைமுறை களை இன்றளவும் உத்வேகப்படுத்திக் கொண்டிருக்கும் இலட்சியங்களின் நாயகரான, இந்தியாவின் மிக உயர்ந்தபட்ச அளவுக்குப் போற்றப்படும் வரலாற்று ஆளுமைகளுள் ஒருவரான சிவாஜியின் மேற்கண்ட பண்புகளைக் கொண்டாடிப் பாராட்டுவதாக மேற்கண்ட வெளியீடு அமைந்திருந்தது.



"நார்நலா மகோத்சவ்- 2026" நாளின் போது, நார்நலா கோட்டை பற்றிய ஒரு சிறப்பு அஞ்சல் உறையம், சிறப்புக் கேன்சலேஷனும் 2026, பிப்ரவரி 17 அன்று நாக்பூர் பிராந்திய அஞ்சல் சேவைகள் பிரிவின் இயக்குநர் டாக்டர் சுதிர் jakhere அவர்களால் வெளியிடப்பட்டன. அகோலா மாவட்ட ஆட்சியர், திருமதி வர்ஷா மீனா அவர்கள் முதன்மைச் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார். மேற்கண்ட சிறப்பு வெளியீடுகளின் தொகுப்பு மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப் பட்டது. மேனாள் சட்டமன்றப்பேரவை உறுப்பினரான திரு. சஞ்சய் கவாண்டே, அகோட் டி சி எஃப், திரு. ராகுல் சிங் டோலியா, மற்றும் ஏனைய முக்கியப் பிரமுகர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நார்மலா கோட்டை யின் வரலாற்று, கலாச்சாரப் பாரம்பரிங்களுக்குப் பொருத்தமான புகழஞ்சலி யாக ஒரு குறிப்பிடத்தக்க அஞ்சல் தலை சேகரிப்பு நிகழ்ச்சியாக மேற்கண்ட வெளியீட்டு விழா அமைந்தது.




ICC U19 ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டிப் பந்தயம் 2026 இல் இந்திய அணியின் வெற்றியைப் பாராட்டிக் கொண்டாடும் விதத்தில் ஒரு சிறப்புக் கேன்சலேஷன் 2026, பிப்ரவரி 7 - ஆம் தேதியன்று மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. அமிதாப் சிங், மும்பை ஜி பி ஓ வின் இயக்குநர் திருமதி. ரேகா ரிஸ்வி, ஏ டி பி எஸ்(ஆர்) திரு. சந்தோஷ் குமார் எஸ். குல்கர்னி, ஏ டி பி எஸ்(பிடி) திருமதி. ஷில்பா ரானே மற்றும் ஏனைய அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இந்தியாவின் இளம் கிரிக்கெட் வீரர்களின் மகத்தான சாதனையைப் பாராட்டிப் புகழும் ஒரு பெருமிதமிக்க அஞ்சல் தலைகள் சேகரிப்புத் திருவிழாவாக இந்தத் தருணம் அடையாளப்படுத்தியது.

## முக்கிய அம்சங்கள்




ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு.நிர்மல் ஜித் சிங் அவர்களின் அலுவலகத்தில் பணியாளர்கள் மற்றும் நிர்வாக நிறுவமைப்பு தொடர்பான இரண்டுநாள் பணிமனை 2026, பிப்ரவரி 12 , 13 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. தெலுங்கானா, ஜார்கண்ட், சத்தீஸ்கர், ஒதிஷா அஞ்சல் வட்டங்களிலிருந்து அதிகாரிகள் இதில் பங்கேற்றிருந்தனர். இப் பணிமனைக்குத் திரு. சுவேந்து குமார் ஸ்வைன், உறுப்பினர், பி எஸ் பி. தலைமை வகித்து நடத்தினார். கூட்டிணைந்த கற்றல் மற்றும் நிர்வாகரீதியான நிபுணத்துவம் ஆகியவற்றை வளர்த்தெடுப்பதை இப்பணிமனை முன்னெடுத்தது.




இந்திய அஞ்சல் துறையும், ஷிப் ராக்கெட் நிறுவனமும் மும்பையில் 2026, பிப்ரவரி 18 அன்று சர்வதேச நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தன. இதன் மூலம், விளிம்புகளற்ற, எல்லைகள் கடந்த மின் - வர்த்தகத்தை எம் எஸ் எம் இ நிறுவனங்கள் மேற்கொள்ள முடியும். இந்திய அஞ்சல் துறையின் விரைவான, நம்பகமான சர்வதேசக் கடல் வழி சரக்குப் போக்குவரத்துக்கான விரிந்து பரந்த உலகளாவிய வலைப்பின்னல் அமைப்புக்கு ஓர் உந்துசக்தியாக ஏற்றுமதியாளர் கள் ஷிப் ராக்கெட் போர்ட்டலை இப்போது பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. அமிதாப் சிங் அவர்கள் உரையாற்றினார். அஞ்சல் துறையின் முதுநிலை அதிகாரிகளும், ஷிப் ராக்கெட் நிறுவனத்தின் பிரதிநிதி களும் இதில் பங்கேற்றனர். இந்தியாவின் ஏற்றுமதி சார்ந்த சூழலமைப்பை வலிமைப்படுத்துவதிலும், சிறிய வர்த்தக நிறுவனங்களை அதிகார வலிமை யுடையவையாக்குவதிலும் இந்த முன்னெடுப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அடிவைப்பாக அமையும்.




ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் அஞ்சல் தலைவர் திரு. நிர்மல்ஜித் சிங் அவர்களின் அலுவலகத்தில் ஆதார், பி ஓ பி எஸ் கே மற்றும் சி சி எஸ் ஆகியவற்றின் பணிகளில் செயற்திறன் வெளிப்பாடுகளைப் பரிசீலனை செய்யும் மீள்-ஆய்வுக்கூட்டம் ஒன்று 2026, பிப்ரவரி 26 அன்று நடைபெற்றது. டாக் பவன் பார்சல் மற்றும் சி சி எஸ் இயக்குநரகத்தின் பொது மேலாளர் திருமதி. மனிஷா பன்சால் பாதல் அவர்கள் முன்னிலை வகித்தார். இந்த அஞ்சல் வட்டத்தில் குடிமக்களை மையமிட்ட அஞ்சல் சேவைகளை வலிமைப்படுத்து வதை நோக்கிய தங்களின் சிறப்பான பங்களிப்புகளுக்காக மிகச் சிறந்த செயற் திறன் வெளிப்பாட்டாளர்களும், ஆதார் மையங்களும் இந்த நிகழ்ச்சி யில் பாராட்டப்பட்டுக் கவுரவிக்கப்பட்டனர்.




அவுட் லுக் மணி பப்ளிஷிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் 2026, பிப்ரவரி 20 ஆம் தேதியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 40 after 40 expo வின் நான்காவது அமர்வில் இந்திய அஞ்சல் துறை ஒரு காட்சிப்படுத்துநர் ஆகப் பங்கேற்றது. மும்பை பி கே சி யிலுள்ள ஜியோ வேர்ல்ட் கன்வென்சன் மையத்தில் இது நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி, மிகப்புகழ் வாய்ந்த தலைவர்கள் மற்றும் மாற்றங்களுக்கு வித்திடுவோர் பலரையும் ஒன்றிணைத்து ஒரே அரங்கில் கொண்டு வந்திருந்தது. இந்திய அஞ்சல் துறையின் சிறு சேமிப்புத் திட்டங்கள், அஞ்சல் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் போன்றவற்றைக் காட்சிப் படுத்துவதற்கு ஒரு மேடையை இது வழங்கியிருந்தது. மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. அமிதாப் சிங் அவர்கள், குடிமக்களுக்குப் பாதுகாப்பான, நம்பகமான ஒரு முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிக் காட்சிப்படுத்தும் விதத்தில் ஒரு முன்மொழிவை வழங்கினார். அதே சமயம், மும்பை வடக்கு மண்டலத்தின் எஸ் எஸ் பி ஓஸ் திருமதி தீப்ஸிக்கா பிர்லா அவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.



ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் அஞ்சல் தலைவர் திரு. நிர்மல் ஜித் சிங் அவர்கள், 2026, பிப்ரவரி மாதத்தில் Gadasanput, Bhainchua, Belagachhia, Telengapentha, Gopapur, Abhimanpur ஆகிய ஊர்களிலுள்ள கிளை அஞ்சல் நிலையங் களுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு அவர், புவனேஷ்வர், கட்டாக் நகரம், கட்டாக் தெற்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த சுமார் 100 க்கும் மேற்பட்ட கிளை அஞ்சலக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் கள், கிளை அஞ்சலகங்கள் தற்போது cost மையங்களாக மட்டுமே இருந்து வருவதற்கு மாறராக, அவை இலாபமீட்டும் மையங்களாக உருமாற்றமடைய வேண்டியதன் அவசியம், பார்சல், மெயில் சேவைகளை வலிமையுடையவை யாக்குதல், இ சி ஆர் ஐ அதிகரித்தல், அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கியை விரிவு படுத்துதல், அஞ்சல் ஆயுள் காப்பீடு, ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடு போன்ற திட்டங்களின் கீழ் ஒவ்வொரு குடும்பத்தையும் கொண்டு வருவது போன்ற பணிகளின் மேல் கவனம் குவிப்பவையாக அமைந்திருந்தன. வீடு வீடாகப் போய் மக்களை அணுகுவது, எதிர்காலத்தின் தேவைகளுக்கேற்பத் தயார் நிலையில் இருந்து, குடிமக்களை மையமிட்ட வளர்ச்சி மேம்பாட்டுக்கான செயல் உத்திகளைப் பயன்படுத்துவது ஆகியவற்றுடன் ஒத்திசைந்த வகையில் கடிதங்களின் மூலம் இந்திய அஞ்சல் துறை பெறும் மூல வலிமையை மேலும் அதிகரிப்பது போன்ற அம்சங்களின் மீது அழுத்தம் தரப்பட்டது




புவனேஷ்வர் அஞ்சல் பிராந்தியத்தின் இரண்டாவது சுதந்திரமான அஞ்சல் வழங்கு மையம் (IDC) ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு.நிர்மல்ஜித் சிங் அவர்களால் 2026, பிப்ரவரி இரண்டாம் தேதியன்று Rasulgarh அஞ்சல் நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த வட்டத்தின் முதுநிலை அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். இந்தப் பிராந்தியத்தில் நடவடிக்கைகளின் நடைமுறையாக்கத் திறன் மற்றும் சேவை வழங்கல் செயற்திறன் ஆகியவற்றை நோக்கிய ஒரு முக்கியத்துவமிக்க அடி வைப்பை மேற்கண்ட தொடக்கம் குறிக்கிறது.




கடிதங்களைக் கையெழுத்தில் எழுதி அனுப்பும் கலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பரப்புரை இயக்கமான "DhaiAakhar" மூலம் கால எல்லைகளற்ற மதிப்பைக் கொண்டிருக்கும் கையெழுத்து மூலம் தகவல் தொடர்புகளை முன்னெடுத்துச் செல்லும் அஞ்சல் துறை தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, தேசிய கடிதமெழுதும் போட்டி 2025 - 2026, ஜம்மு & காஷ்மீர் அஞ்சல் வட்டத்தினால் பாராமுல்லா வில் வெற்றி கரமாக "என்னுடைய முன் மாதிரிக்கு ஒரு கடிதம்" என்ற கருப்பொருளில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டி, உத்வேகம் நிறைந்த பங்கேற்புகளை இளம் எழுத்தாளர்களிடமிருந்து கண்டது. எழுதப்பட்ட வார்த்தைகளில் வெளிப்படும் என்றும் நிலைத்திருக்கும் ஆற்றலை அவர்கள் மீளவும் உறுதிப்படுத்தினார்கள். நன்றியறிதல், விழுமியங்கள், உத்வேகம் ஆகியவற்றைக் கைகளால் எழுதப்பட்ட கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்தியிருந்தனர்.



மும்பையிலுள்ள இந்திய அஞ்சல் துறையின் சர்வதேச வர்த்தக மையத்தில் (IBC) இ எம் எஸ் மூலம் உகாண்டாவுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த 660 கி.கி. எடையுள்ள மருந்தியல் சரக்குப் பொதி ஒன்றை வெற்றிகரமாகக் கையாண்டுள் ளது. பணிகளை நடைமுறைப்படுத்துதலில் செயற்திறனையும், விரைவையும் இது எடுத்துகாட்டியுள்ளது. ஒரு முனையிலிருந்து மறு முனை வரையிலான செயல் முறை - பதிவு செய்வதிலிருந்து, சரக்குகளை அனுப்புவதற்கான சுங்க வரி தொடர்பான அனுமதிகள் பெறுதல், ஆகியவை அனைத்தும் சில மணி நேரங்களில் செய்து முடிக்கப்பட்டன. இந்த அனுப்புகைப்பணி, ஒவ்வொரு பெட்டியிலும் தலா 35 கி.கி. எடையுள்ள இ எம் எஸ் பதிவுகளுடன் பல பெட்டிகள், ஏற்றுமதியாளர்கள் நடுவே தமது சரக்குகளைப் பின் தொடர்வதற்கான ஏற்பாடு களுடன் பயணிப்பது உள்ளிட்ட அம்சங்களுடன் நடந்துள்ளது. வீடு வீடாகச் சென்று பொருள்களை உரியவர்களிடம் வழங்கும் நம்பகத்தன்மை மிக்க வகை மாதிரியுடன், சர்வதேச சரக்குப் போக்குவரத்துப் பிரிவில் இந்திய அஞ்சல் துறை, தன்னுடைய நிலையைத் தொடர்ந்து வலிமைப்படுத்திக் கொண்டே வந்துள்ளது. தன்னுடைய உலகளாவிய அடிச்சுவடுகளை விரிவாகவும், ஆழ்மாகவும் பதிப்பதற்கேற்ற வகையில் தன் சூழல் துணையமைப்புகளைத் தரமுயர்த்திக்கொண்டே வருகிறது.




அஞ்சல் ஆயுள் காப்பீட்டுத் திட்டம், ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வுப் பரப்புரை ஒன்று, இந்திய அஞ்சல் துறையால் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மண்டலத்தில் 2026, பிப்ரவரி 09 - ஆம் தேதியிலிருந்து 24 - ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. பொதுமக்கள் நடுவே, மக்கள் நலம் சார்ந்த காப்பீட்டுத் திட்டங்களை முன்னெடுத்துப் போவதற்காக இது நடத்தப்பட்டது. இந்தப் பரப்புரையின் போது, அஞ்சல் பணியாளர்கள் நேரடியாகக் குடிமக்களுடன் உரையாடலில் ஈடுபட்டு, பல்வேறு பி எல் ஐ மற்றும் ஆர் பி எல் ஐ திட்டங்களின் முதன்மையான ஆதாயங்களைக் குறித்து விளக்கங் கள் அளித்ததுடன், அவற்றில் பதிவுகள் செய்வதற்கும் வழி காட்டினர். உற்சாக மளிக்கும் எதிர்வினைகளைக் கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகள் இரண்டிலுமே இந்த முன்னெடுப்பு பெற்றுள்ளது. அஞ்சல் காப்பீட்டுத்துறையின் சேவைகள் மீது வளர்ந்து வரும் மக்களின் நம்பிக்கையையும், விழிப்புணர்வையும் இது பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.




நாற்பத்தி ஒன்பதாவது கோல்கத்தா சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் இந்திய அஞ்சல் துறையின் அரங்கு, 2026, ஜனவரி 23 அன்று தெற்கு வங்காள மண்டலத் தின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. ரிஜு கங்குலி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில், போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் (கடிதங்கள் & BD) திரு. சுப்ரியா கோஷ் அவர்கள், திரு. ஹம்மத் ஜஃபார்(DPS - தலைமையகம்) அவர்கள் மற்றும் ஏனைய முதுநிலை அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். ஜனவரி 23 -ஆம் தேதியிலிருந்து பிப்ரவரி 3 - ஆம் தேதி வரையில் நிறுவப்பட்டி ருந்த இந்த அரங்கு, இந்திய அஞ்சல் துறையின் பாரம்பரியப் பெருமிதங்களும், நவீன சேவைகளும் கலந்து குழைந்த ஒரு காட்சியை முன்வைத்திருந்தது. பார்சல்கள் அனுப்புவதற்கான வசதிகள், மை ஸ்டாம்ப் சேவைகள், அஞ்சல் தலைகள் சேகரித்தல், உடனடி ஆதார் பதிவுச்சேவைகள் போன்றவற்றைப் பார்வையாளர்கள் பயன்படுத்திக் கொண்டனர். பெருமையும், கவுரவமும் மிக்க ஓர் இலக்கிய - புத்தகக் கண்காட்சியில், பொதுமக்களுடன் கலந்துறவாடும் வாய்ப்பை இது அதிகரித்துத் தந்தது




ஜே என் வி கொஹிமாவிலிருந்து வருகை தந்திருந்த மாணவர்கள், தங்களுடைய 'பைகள் இல்லா நாள்' நடவடிக்கைகள் சார்ந்து, வடகிழக்கு அஞ்சல் வட்டத்தின் கொஹிமா தலைமை அஞ்சலகத்தின் அலுவலக வளாகத்திற்கு 2026, பிப்ரவரி 25 - ஆம் தேதியன்று வருகை தந்து பார்வையிட்டனர். அவர்களின் வருகையின் போது, அஞ்சல் தலைகள் சேகரிப்பு தொடர்பான ஒரு குறுகிய நேரப்பணிமனை நடத்தப்பட்டது. அஞ்சல் பணிகளின் நடவடிக்கைகள் - அஞ்சல் தலைகள் சேகரிப்பில் தொடங்கி, பதிவு செய்யப்படுதல், முதல் உரியவரிடம் வழங்கப் படுவது வரையிலான ஒரு கடிதத்தின் பயணம் குறித்த அறிமுகம் அந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் மூலம் அவர்கள் அஞ்சல் துறைப் பணிகள் குறித்த செயல்பூர்வமான உள்ளீடுகளையும் பெற்றனர். பின்கோட் அமைப்பு முறையின் முக்கியத்துவம், கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்துதல் சார்ந்த சுருக்கமான செய்முறைப் பயிற்சி ஆகிய ஈடுபடுத்தும் அமர்வுகளிலும் அவர்கள் கலந்து கொண்டு தகவல் அறிதலுக்கும், கலந்துரையாடுவதற்கும் என இரு வகைகளிலும் பயன்படுமாறு அமைந்த ஓர் அனுபவத்தைப் பெற்று மகிழ்ந்தனர்.




இந்திய அஞ்சல் துறையினால் கர்நாடக மாநிலத்தில், நிதியியல் சேவைகளைப் பற்றிய ஒரு பணிமனை, 2026, பிப்ரவரி 6 - ஆம் தேதியன்று நடத்தப்பட்டது. சேவைகள் வழங்குதலை வலிமைப்படுத்துதலையும், அடிமட்டம் வரையில் எண்ணியல் பயன்பாடுகளை ஏற்பளிப்பதை விரைவுபடுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு இது நடத்தப்பட்டது. இந்தப் பணிமனை, அஞ்சல் துறை தொலைநோக்குப் பார்வையுடன் பாதுகாப்பான, உள்ளாக்கத்தன்மை வாய்ந்த, வாடிக்கையாளர்களை மையமிட்ட தனது நிதியியல் சேவைகளை அதன் விரிந்து பரந்த வலைப்பின்னல் அமைப்பு நெடுகிலும் முன்னெடுத்துச் செல்வதை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது. 140 ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பப் பட்ட இந்திய அஞ்சல் துறை, குடிமக்களுக்கு நிதியியல் சேவைகளைப் பெறுவதற்கான விரிவாக்கப்படும் அணுகல் வழிகளில் முயல்வதில் ஒரு முக்கியத்துவம் மிக்க பாத்திரத்தைத் தொடர்ந்து வகித்து வருகிறது. இந்த முன்னெடுப்பு, ஒவ்வோர் இந்தியருக்கும் அதிகார வலிமையளிக்கும், உள்ளாக்கத் தன்மையுள்ள, பாதுகாப்பான ஓர் எதிர்காலத்தை வளர்த்தெடுப்ப தற்கு அஞ்சல் துறையின் முன்னேறிக் கொண்டிருக்கும் கடப்பாட்டுறுதியைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.



சத்தீஸ்கர் மாநிலம், துர்க் பகுதியில், முதலாவது அகில இந்திய அஞ்சல் இணை விளையாட்டுப் போட்டிகள் - 2025 - 2026, 2026,பிப்ரவரி 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. டேபிள் டென்னிஸ், செஸ், பாட்மிண்டன், கேரம் ஆகிய பல்வேறு விளையாட்டுகளில் போட்டிகளில் பங்கேற்க, 14 அஞ்சல் வட்டங்களிலிருந்தும் சுமார் 150 க்கு மேற்பட்ட இணை- விளையாட்டு வீரர்களை அஞ்சல் துறை ஒன்றாகத் திரட்டிக் கொணர்ந்திருந்தது. அஞ்சல் துறையின் தோழமை நெடுக விளையாட்டுத்திறன்களில் நிபுணத்துவத்தையும், தடுமாறா உறுதியையும் கொண்டாடுவதாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. இவற்றில் வெற்றியாளர்களாக டேபிள் டென்னிஸ் போட்டியில் ஸ்வேதா ஸ்ரீ வஸ்தவ்(சத்தீஸ்கர்) மற்றும் ஸச்சின் தயாத்(மகாராஷ்டிரா) ; செஸ் போட்டியில் கர்நாடகாவைச் சேர்ந்த சாமார்த் ஜே ராவ் மற்றும் நீரவ் ஹெச் பாண்டியா(குஜராத் அஞ்சல் வட்டம்), ஆர்.சீமா (தமிழ் நாடு) ; பஞ்சாப் அஞ்சல் வட்டத்தின் தீவன் சிங், ஹரியானாவின் ராகேஷ் ரங்கி, தெலுங்கானா அஞ்சல் வட்டத்தின் நரேஷ் யாதவ், தமிழ்நாட்டின் வி.ஜோதி லக்ஷ்மி ஆகியோர் பாட்மிண்டன் விளையாட்டிலும், ஹரியானாவில் சுரேந்தர் குமாரும், குஜராத்தின் ஹெச். பாபாரு ஆகிய இருவரும் கேரம் விளையாட்டிலும் தேர்வு பெற்று சிறப்புப் பெற்றனர். இப்போட்டிகளின் நிறைவு விழாவில் சத்தீஸ்கர் அஞ்சல் வட்டத்தின் அஞ்சல் சேவைகள் பிரிவின் இயக்குநர் திரு. தினேஷ் குமார் மிஸ்ட்ரி மற்றும் பிலாய் ஐ ஐ டி இயக்குநர் பேராசிரியர் ராஜீவ் பிரகாஷ் ஆகிய இருவரும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்திய நிலையுறுதி மிக்க உழைப்பையும், தீர்மானகரமான உறுதிப்பாட்டையும் அவர்கள் பாராட்டிப் பேசினார். இந்த நிகழ்ச்சி அஞ்சல் துரையின் அமைப்புரீதியான தோழமையுணர்வையும், உள்ளாக்க விளையாட்டுகளில் துறையின் கடப்பாட்டுறுதியையும் வெளிப்படுத்திக் காட்டியது.

सत्यमेव जयते
भारत सरकार

भारतीय डाक
डाक सेवा-जन सेवा
India Post
Dak Sewa-Jan Sewa

বিশদে জানতে ফলো করুন
www.indiapost.gov.in